

15 JUN 192

உ

முருகன் துணை.

# எட்டுகுடி முருகன் பேரில்
# பல வர்ணச் சிந்து

அழிஞ்சி மங்கலம்
வைத்திலிங்க நாயனார் குமாரர்
P. A. V. முருகைய நாயனார் அவர்கள்
இயற்றியதை

நாகபட்டணம்
மு. பி. அ. பிச்சக் கவிராயர் அவர்களால்
பார்வையிடப்பட்டு

நாகபட்டணம்
ஸ்காட்டிஷ் பிராஞ்சு பிரசில்
பதிப்பிக்கப்பட்டது.
1922.

உ

முருகன் துணை.

# எட்டுகுடி முருகன்பேரில் பலவர்னச் சிந்து.

நாகபட்டணம் மு. அ. பிச்சைக்கவிராயர்
அவர்களியற்றிய சாற்றுக்கவி.

## கலி விருத்தம்.

கற்புனிதன் நாயனார் மரபிற்றேன்றி
நல்லொழுக்கமாய்த் தமிழை நன்காராய்ந்து
தற்பரமன் யீன்றவடி வேலன்மீது
சரியான பலவர்னச்சிந்தாய்த்தானே
உற்பவித்து முருகையனுரைத்தாரீதை
உம்பருலகத்தமுதம் போலெல்லோரும்
தற்கம் ஒருவர்க்கொருவர் கொண்டே உண்ணத்
தலைப்பட்டார் எல்லவரும் தலைப்பட்டாரே

## விருத்தம்.

1. சங்கரனுரீன்றெடுத்த வேதா போதா
தற்பரனே அற்புதனே கார்க்கொண்ணுதா
மங்களமாய்க் கிருபைதரவாதா சூதா
மைந்தனும் பிச்சன் தமிழைச் சேர்த்தாள் நீதா
சங்கைபொருந்திடு முன்னடிதானே தாதா
தங்கைதனக் குபதேசம் சாற்றும் நீதா
எங்கினுமே உனைப்பணிவார் சாமிநாதா
எட்டுகுடி வாழுகின்ற யினிபொற்பாதா

2. ஆருபடை வீடமர்ந்த அய்யா மெய்யா
அன்பனை நீயகற்றுவது அழகோதுய்யா
நாரதர் சொற்கேட்டு மனம் நடந்துசென்று
நங்கையெனும் வள்ளிதனை மனதிற்கொண்டு
சீருடைய வேடவனாய் வேங்கையாகி
திங்களணிந்தோன்மகனே துயரம் ஆனாய்
யீரு ஆருகரமது வேயிசைந்த நாதா
எட்டுகுடி வாழுகின்ற யினிபொற்பாதா

3. தப்புவராமல் எனைநீகாரும் காரும்
தங்கவடிவேலவா உன்கண்ணால் பாரும்
கற்பனையாகிய தெய்வயானைபாகா
கந்தனெனும் சுந்தரனே கருணைவோகா

10 JUN 1922



சொற்பனத்திலும் உனைநான் மறந்திடாமல்
சுந்தரபாதம் எனக்குத்தோன்றச் செய்யும்
எப்புவியும் உந்தனது அருளைப்போற்றும்
எட்டுகுடி வாழுகின்ற யினிபொற்பாதா

4. சரவணையிலே யுதித்த முருகா வா வா
தந்திமுகனுக்கிளைய சாமி வா வா
கருணைதர எந்தன் முன்னே கந்தா வா வா
கங்குல்தனையே விலக்கும் கதிரே வா வா
அருமையுடனே பணிந்தேன் பழனி வா வா
அந்தரத்துக்காவலனே அருகில் வா வா
யிரவிகவி யுலகமெல்லாம் போற்ற வா வா
எட்டுகுடி நாதனே என் முன்னே வா வா

5. இந்திரனார் மருமகனே போற்றி போற்றி
யீசனது திருமகனே போற்றி போற்றி
மந்திரசடாதரனே மணியே போற்றி
மங்கள குணாகரனே வரந்தாபோற்றி
செந்தூரில் வாழ்குமரா செந்தாள் போற்றி
தேவியிரண்டுடையதொரு செல்வா போற்றி
எந்தனைக்காத்திட உன்பாதம் யீவாய் போற்றி
எட்டுகுடி வாழுகின்ற யீசா போற்றி

6. பச்சைமயிலெத்தினமும் நடனமாட
பன்னிரெண்டு சிரசிலுற்றமகுடமாட
கொச்சைக்குறவள்ளி தெய்வானை கூட
குதுகுலமாய் மனமகிழ்ந்து கொண்டேயாட
கெர்ச்சனைசெய்துன் சேவல் கொடியுமாட
கேவலச்சூரனை வென்றவேலுமாட
இச்சையொடு பிச்சன் தமிழ் எங்கும் நாட.
எட்டுகுடி முழுதும் முருகாவென்றாட

வேறு ஆசிரிய விருத்தம்

ஆறுமகுடமும் ஆறுபருதியொளி கருமழகும்
ஆனெனப்பது மவழகும்
ஆர்வெயிர் கேயூர குண்டலத்தழகு மரு
ளாளி யெனவிழிகளழகும்
நீருபூனை நுதலழகும் வேலணிகரத்தழகும்
நித்திலக் கோர்வையழகும்
நிறைகிரணமுகவள்ளி தெய்வானை யழகுமடி
நெஞ்சிலுறுதொண்டர் வினையைச்

சிரும்மயிலழகும் பன்னிருதோட்கடம் பழகும்
செறிசிலம்பழகும் நீண்ட
சேவலங்கொடியழகும் மென்மேல் விளங்க வரு
சிறியன் மூன்றூன்றி கெஞ்சக்

தேருவகையுனது செம்பொன்னடித்துணைபட
செய்து ரெட்சித்தருளுவாய்
சிந்தை கண்புற்றமரா வந்துவந்தர்ச்சனை செய்
சிரெட்டிகுடி முருகனே

வட்டவாருலகில் வருதிட்டக் கொடுங்கலி
வருத்துவது தோற்றமிலையா
வள்ளி தெய்வானை யறியார் களாகுருதிவழி
வடிவேலறிந்திடாதா

இட்டமாயூர மருகிலையா பசுஞ்சூட்
டிலங்கு சேவலுமில்லையா
இடும்பனொடு நவவீரரில்லையா உன் செவிக்
கீராறுக் கேற்கவிலையா

அட்டமாநாகங்கள் புற்றுராத்திசையானை
அலமுராக்குலமாதிரம்
அடியரச்சேடன் முடியதிர அண்டம் பிளக்
தாகாயகங்கையொழுக

திட்டமாரிச் சந்ர சூரியர்களுலைய ஒளி
சிறைமயொலித்துலவு மயிலாய்
சிந்தை நண்புற்றமரர் வந்துவிந்தர்ச்சனை செய்
சிரெட்டிகுடி முருகனே

நோண்டிச் சிந்து.

1. சத்தியுமையருள்பாலா—வேல் வேல்
சங்கரனூரீன்றெடுத்த வடிவேலா—வேல்
சுத்தமுள்ளோர்க்கனு கூலா—வேல் வேல்
சுருதிகளாய்ந்திடுமறைமூலா—வேல் வேல்

2. காலடிகள் ஒருகோடி—வேல் வேல்
கண்ணன் மருகனே உந்தன்பதந்தேடி—வேல் வேல்
தாவியேவருவாரோடி—வேல் வேல்
தற்பரனே உந்தனது அருள் கூடி—வேல் வேல்

3. கதிதரு முருகையனே—வேல் வேல்
காத்து ரெட்சித்திடுவாய் திருமெய்யனே—வேல்
விதியுகந்திடு மெய்யனே—வேல் வேல்
தினதடி எந்தனுக்கு அருள் தய்யனே

குற்றங்கள் தனைநீக்கு—வேல் வேல்
கோடிவந்தனஞ் செய்தேன் அருள்வாக்கு
நற்பொருள் உண்டாக்கு—வேல் வேல்
நம்பிவந்திடும் ஏழை குறைபோக்கு

விருத்தம்.

கோலாகலமுடைய முருகா-குழந்தை வடிவேலவனே
சீலமுள்ள எட்டுகுடி முருகா-செல்வனே வந்திதிப்பாய்

ஷை சிந்து.

சூரனையேசம்மாரா—வேல் வேல்
துதிமிகுந்திடும் அதிகெம்பீரா—வேல் வேல்
கோரிவரும் வினைதீராய்—வேல் வேல்
குஞ்சரிவள்ளியணையும் செம்மாரா—வேல் வேல்
செவிதனில்க் கேட்கலையா—வேல் வேல்
திரும்பிப்பார்க்க உனக்குவெகுதுலையா—வேல் வேல்
பவிதம் ஏர்ப்படவில்லையா—வேல் வேல்
பக்தர்வினை தீர்க்கபெருமலையா—வேல் வேல்.
பரமனார் மருமகனே—வேல் வேல்
பாங்காயெட்டுகுடியிலுருகுகனே—வேல் வேல்
குருபரனனபரனே—வேல் வேல்
குருநாதன் பணியும் பன்னிருகரனே.
பிச்சனுனைப்பாடி—வேல வேல்
பெருமையுடனே மனமகிழ்நாடி—வேல் லேல்
பச்சமாய்க் கொண்டாடி—வேல் வேல்
பாலகன்வந்தேன் செய்யாதேமோடி—வேல் வேல்.

காவடிச்சிந்து.

தெள்ளுதமிழுக்குதவு என்ற மெட்டு.

1. எட்டுகுடிவாழும்வடிவேலா ஜெக
   தீசனார்பயின்றெடுத்த பாலா—உன்னை
   ஏற்றியே துதித்தேனே கண்
   பார்த்திடுவள்ளிக்கிசைந்த லோலா அனுகூலா.
2. தந்தைக்கு உபதேசித்த வேதா சிரு
   தாசனுக்கருள்தர ஒண்ணுதா—மத
   தந்திமுகனுக்கிளைய மந்திர சடாதரனே
   தானே முருகோனே.
3. உந்தனைப்பணிந்தேனே நாள்தோறும் எந்தன்
   ஊழ்வினைப்பாவமிருந்தால்த்தீரும்—துதி
   ஓங்குதே உலகமெங்கும் தீங்கில்லாமலே எந்தனைச்
   சேரும் பதந்தாரும்.

4. தேவலோகத்திற்குச் சேனாபதியே திருச்
சித்தமிரங்கிக் கண்பாரும் நிதியே—அதி
திட்டமுடனெட்டுகுடி வட்டமயிலேறிவரும்
தீரா யென்னைக்காரா.

5. தேனுகந்திடுங்குறவர்க் கஞ்சி வள்ளி
தேனுந்தினைமாவுக்குநீ கெஞ்சி—அதி
சித்திரவடிவேலனே சத்துருவர்களுடைய
தீங்கு நீக்கித் தாங்கு.

6. ஆனைமுகவனுக்கிளையோனே உன்னை
அண்டினவர்களுக்கருள் கோனே—வேறு
ஆதரவுனையல்லாது யாருமேதுணையில்லையே
அய்யா மதி துய்யா.

7. சூரனைச்சம்மாரஞ்செய்த சிங்கம் உன்னை
தோத்திரஞ்செய்தால் விலகும் பங்கம்—அதி
சுந்தரா ஆனந்தமொடு சந்தோஷமாகவே அருள்
தாரும் கலி தீரும்.

8. வேங்கைமரமாகினின்ற வேலா உன்னை
வேண்டியவர்கட்கு அனுகூலா—கொடும்
வேடுவர்களுன்னைவந்து நாடும்பொழுது மறைந்த
வேதா மலர்ப் பாதா.

9. எங்கினுமே உந்தனடிதேடி உன்னை
யேற்றியே காவடிகொண்டு ஓடி—வந்து
இன்பமுடனபிஷேகம் சம்ரமமுடனேசெய்வர்
காடி சனம் கோடி.

10. சேவலங்கொடியுடைய வாசா பிச்சன்
செந்தமிழைச் சூடுங்குமரேசா—உந்தன்
செய்யபாதந்தாருமுருகையன் தமிழுக்கிரங்கிச்
சேரும் என்முன் வாரும்.

வேறு சந்த விருத்தம்.

ஆறுமுகமானவனே முருகா
அங்கயற்கண் பாலகனே
சீறுமயிலேறிவந்து முருகா
தீவினையை போக்கிடுவாய்.

யீசனது தன்மகனே முருகா
எட்டுகுடி ஆண்டவனே
தாசர்களைக் கைவிடாமல் முருகா
தான்காக்க வேணுமய்யா.

திருமால் மருமகனே முருகா
தெய்வானை நாயகனே
வருவாயிது சமயம் முருகா
மைந்தனை நீ காத்திடவே.

வேங்கைமரமாகி முருகா
வேடவனாய் நின்றவனே
பாங்கான வள்ளியிடம் முருகா
பாசாங்கு செய்தவனே.

கந்தனே நீ காருமென்று முருகா
காவடிகள் தானெடுத்தேன்
சிந்தைதனி லேகிருபை முருகா
செய்திடவே வேணுமை.

பில்லியொடு சூனியங்கள் முருகா
பேய்பிடித்திருந்தாலும்
எல்லாம் பறந்தோடும் முருகா
எந்தனைக்கண் பார்த்திடவே.

மாராட்டமோடுதிஷ்டி முருகா
மருந்துவகையானாலும்
ரோகீ பார்த்திடவே முருகா
நிமிஷம் மறைந்துவிடும்.

நெத்திதனக்கலகும் முருகா
நேரான மார்பலகும்
சுத்தித்திருவலகும் முருகா
தொன்றவே போடலுற்றேன்.

சித்திரையிலும்உனது முருகா
நேரான பொன்னடியை
எத்தினமும் நான்மறவேன் முருகா
ஏழைதன்னைக் காருமய்யா.

பச்சமாய் முருகையனுன் முருகா
பாங்காகப் பாடிவந்தேன்
பிச்சன்தமிழ் மாலையோடு முருகா
பிரியமாய்ச் சூடுமய்யா.

வேறு சந்தம்—சந்தவரை வந்தகுக என்ற மெட்டு.

1. சற்சரவணக் குகனே நாதா உன்னை
நம்பிவந்தேன் பொன்னடியைத் தாதா—குணநீதாதில்லை
நடனமேபுரி கடவுளர்தரும் நடமுள்ளபுய
வடிவேலவனே

காறணசுவாமிக்கு மருகோனே எந்த
கானிலம்புகளும் முருகோனே.

2. எந்தனைக்கலிதுடரு தேகவா
மீய்ந்திடுவீரே எனக்கன்பாக துயர்போக செய்யும்
மின்பனே சூரர்வம்பனேதாச ரன்பனே
மன நண்பனே திரு
இந்திராணிதன்மகள் விவாகாமயி
லேரிவிளையாடிடும் விவேகா.

3. பேதைகுற வள்ளிமணவாளா தாசன்
பிச்சனுரை செந்தமிழைக் கேளாய்—கெடுவாளாய்
உன்னை பிரியமுடனே அருமையாகப்பன்
னிருபதமதை உருதியாகவே
பேதகம்வாராது சிரஞ்சூடிவந்தேன்
பேர்மகிழ உந்தனடி தேடி.

கும்மி.

1. அங்கயற்கண்ணி அருமகனே எனக்
காதரவுதருவாய்குகனே
மங்களமான குருபரனே திரு
வாக்கருளுவாய் அறுசிரனே.

2. வள்ளிதெய்வானை மணவாளா சிவ
மந்திரந்தன்னில் நினைவாளா
புள்ளிமயிலேரிவாரும் என்னை
பூர்த்தியுடனே பதஞ்சேரும்.

3. சூரனைவென்றிடு சம்மாரா யிந்த
தொல்புவியோர்கட் கதிகாரா
வேறுதுணையில்லையே நிதமே பிச்சன்
வேண்டிவந்தேன் அருள்வாய் பதமே.

4. ஆதிசிவன் உமையாள் வாழி திரு
ஆனைமுகவன் பதம் வாழி
சோதியாய் ஆருமுகன் வள்ளிதெய்வானை
சுந்தரப்பதமென்றும் வாழி

5. அச்சிலிட்டவர்களும்வாழி புக
ளானபெரியோர்களும் வாழி
பிச்சன் தமிழ் என்னாலும் வாழி கவி
பேசுவர் கேட்போர்களும்வாழி.

முற்றிற்று.